**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 136/2020**

**பி. வா.சா. 1 - பாலகிருஷ்ணன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 27.11.2025.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் இராஜாக்கமங்கலம் எம்.ஜி.ஆர் நகரில் தாமசம் என்றால் சரிதான். நான் தாமசித்து வரும் வீட்டின் கதவு எண் என்ன என்றால் 5/18. வழக்கு பட்டிகை சொத்தின் கதவு எண் என்ன என்றால் தெரியாது. வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. எம்.ஜி.ஆர் நகர் என்பது பேயோடு முதல் ராஜாக்கமங்கலம் செல்லும் பிராதானசாலையில் இருந்து மேற்காக செல்லும் பெரிய தெரு அதில் சுமார் 40 முதல் 45 வீடுகள் உள்ளன. வழக்கு பட்டிகை சொத்து எம்.ஜி.ஆர் நகர் தெருவில் இருந்து பேயோடு செல்லும் ரோட்டின் மேற்கு ஓரத்தில் எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் சுமார் 150 மீட்டர் இருக்கும். வழக்கு பட்டிகை சொத்து எம்.ஜி.ஆர் நகரை சேர்ந்தது அல்ல பிரதான சாலையை ஒட்டிய பகுதி என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து மூன்று உட்பிரிவுகளாக சர்வே எண் 765/10-1, 2, 3 ஆக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 765/10-1, 2, 3 யாருக்கு உரிமைப்பட்டது என்றால் 765/10-1 பழனிவேலுக்கும் 765/10-2 அழகம்மைக்கும் 765/10-3 ரெத்தினம் என்பவருக்கும் உரிமைப்பட்டது.

சர்வே எண். 765/10 ல் மொத்தம் இரண்டு நபர்களுக்கு மட்டுமே உரிமை உண்டு அது வாதிக்கும் அழகம்மை என்பவருக்கு மட்டும் தான் என்றால் சரியல்ல. சர்வே எண். 765/10 அரசுக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து உட்பட சர்வே எண். 765/10 உட்பட்ட சொத்து அனைத்தும் ரெத்தினம் எனபவருக்கு எக்காலகட்டத்திலும்

பாத்தியப்படவில்லை என்றால் சரியல்ல. அரசு சொத்தை தனி நபருக்கு கொடுக்கும் போது அரசாணை பிறப்பித்து அதன் நகல் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கூறியபடி அரசாணையோ, உத்தரவோ பழனிவேலின் பெயரில் கொடுத்ததாக தெரியுமா என்றால் இல்லை. பழனிவேல்ராஜனுக்கு வழக்கு பட்டிகை சொத்து உட்பட சர்வே எண். 765/10 உட்பட்ட சொத்து அனைத்தும் எக்காலகட்டத்திலும் எந்த உரிமையோ, அனுபவமோ, ஆவணங்களோ பாத்தியப்படவில்லை என்றால் சரியல்ல. ஆகையால் என் கைவசம் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் இருக்கும் வீட்டிற்கு கதவு எண் உண்டா என்றால் பழைய எண் உள்ளது ஆனால் நியாபகம் இல்லை. மேற்படி வீட்டில் யார் தாமசம் என்றால் வழக்கு நடப்பதால் யாரும் தாமசம் இல்லை.

நான் மேற்படி வீட்டில் தாமசித்து வந்ததில்லை என்றால் சரியல்ல. எந்த வருடம் மேற்படி வீட்டில் தாமசித்து வந்தேன் என்றால் சுமார் 6 வருடத்திற்கு முன்பாக. 6 வருடத்திற்கு முன்பாக மேற்படி வீட்டில் வசித்து வந்ததற்கான ஆவணம் ஏதேனும் உண்டா என்றால் இல்லை. கடந்த 6 வருடமாக மேற்படி வீட்டில் யார் தாமசம் என்றால் யாரும் இல்லை. வழக்கின் வாதி மேற்படி வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டில் தான் வசித்து வந்தார் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1, 2 மற்றும் 3 ரசீதுகள் வழக்கு பட்டிகை சொத்திற்கு உண்டானது அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 பழனிவேல் ராஜன் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ல் நிலையான வீட்டு முகவரி என்று தக்கலை அஞ்சல், புலியூர் குறிச்சி ஊரில் வீட்டில் கதவு எண்.5/62 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அங்கு வாடகைக்கு இருந்தார்கள் அங்கு தான் அவர் காலஞ்சென்றார். வாடகைக்கு இருக்கும் வீட்டின் முகவரியை நிலையான முகவரி

என்று குறிப்பிட இயலாது என்றால் சரிதான். நிறைய வீடுகளில் மாறிமாறி வாடகைக்கு இருந்தார் கடைசியாக புலியூர் குறிச்சியில் இருந்தார். வழக்கு பட்டிகை சொத்தில் பழனிவேல்ராஜன் வசித்து வந்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றல் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணம் பழனிவேல்ராஜனின் மனைவிக்கு தமிழ்வளர்ச்சி வளாகம் சென்னையில் இருந்து அனுப்பப்பட்ட கடிதம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ல் கதவு எண்.5/1 ல் பழனிவேல்ராஜன் மனைவி ஜெயலெட்சுமி தாமசித்து வருவதாகவும் மேற்படி முகவரியில் பி.வா.சா.ஆ.5 சார்பு செய்யப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். கதவு எண்.5/1 வழக்கு பட்டிகை சொத்து அல்ல என்றால் சரியல்ல.

நான் கன்னியாகுமரி மாவட்ட நீதிமன்றத்தில் MHOP.No.144/2017 என்ற வழக்கு பழனிவேல்ராஜன் மனைவிக்காக தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி MHOP.No.144/2017 என்ற வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பி.வா.சா.ஆ.6 மற்றும் 7 என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் நான் கதவு எண் 5/18 ல் தான் தாமசம் என்றால் சரிதான். அந்த சமயம் பழனிவேல்ராஜன் மனைவி ஜெயலெட்சுமி எங்கு தாமசம் என்றால் பழனிவேல் வீட்டில் வசித்து வந்தார். பழனிவேல்ராஜன் மனைவியை யார் பராமரித்து வந்தார் என்றால் எனது மனைவி. ஜெயலெட்சுமி எங்கு தாமசம் என்பதை காட்டுவதற்கு பி.வா.சா.ஆ.7 ல் குறிப்பிட்டுள்ள 1 முதல் 11 ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அவரது தாமசம் தெரியவரும் என்றால் வாக்காளர் அடையாள அட்டை, குடும்பஅட்டை, ஆதார் அடையாள அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தகம் உள்ளது. கன்னியாகுமரி மாவட்ட நீதிமன்றத்தில் MHOP.No.144/2017 என்ற வழக்கில் அனைத்து ஆவணங்களையும் நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை.

நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யாததால் பி.வா.சா.ஆ.6 மற்றும் 7 குறித்து எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. ஜெயலெட்சுமி எங்கு தாமசம் என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் அனைத்தையும் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விட்டு மேற்படி ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை தன்மை தெரியவரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஜெயலெட்சுமியின் ஆதார் அடையாள அட்டையின் முகவரி என்ன என்றல் எம்.ஜி.ஆர் நகல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது குடும்ப அட்டையும் வாக்காளர் அடையாள அட்டையின் முகவரி தென்காசி முகவரியில் உள்ளது, வங்கி கணக்கு புத்தகத்தில் ராமன்புதூர் முகரி உள்ளது. ஜெயலெட்சுமி எங்கு காலஞ்சென்றார் என்றால் எம்.ஜி.ஆர் நகர் பழனிவேல் ராஜன் வீட்டில் வைத்து காலஞ்சென்றார். நான் பழனிவேல் ராஜன் வீடு என குறிப்பிடுவது எம்.ஜி.ஆர் நகரில் உள்ள எனது வீடா அல்லது வழக்கு பட்டிகை சொத்தா என்றால் இரண்டு வீடும் ஒரே ஊரில் தான் உள்ளது ஆனால் அது என்னுடைய வீடு அல்ல எனது மூத்த சகோதரர் வீடு. ஜெயலெட்சுமி காலஞ்சென்றது எனது சகோதரர் வீடு என்றால்ச ரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தின் படி ஜெயலெட்சுமி 5/18/1 என்ற கதவு எண் கொண்ட வீட்டில் வைத்து இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5/18/1 என்ற கதவு எண் கொண்ட வீடு வழக்கு பட்டிகை சொத்து அல்ல என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**